# வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

## ஆண்டிறுதிப் பரீட்சை - 2012

### பரதநாட்டியம்

**தரம் - 06** **நேரம் : 1.00 மணித்தியாலம்**

சுட்டெண்:-.........................................

---

### பகுதி - I

◈ **அறிமுறை 50 புள்ளிகளையும் செயன்முறை 50 புள்ளிகளையும் கொண்ட வினாத்தாள்.**

01) **சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. இடது பாதம் தூக்கி ஆடுபவர்
    1) கணபதி 2) குகன் 3) நடராஜர் 4) யமன்

02. ஆரம்பத்தில் கையுடன் செய்யப்படும் அடவின் தாளம்
    1) ஆதி 2) ஏகம் 3) ரூபகம் 4) அடதாளம்

03. "நத்யாம்" என்பதன் தமிழ் கருத்து
    1) காடு 2) இரவு 3) நதி 4) புகழ்தல்

04. ஆதி தாளத்தில் எத்தனை திருதம் உண்டு
    1) 3 2) 4 3) 6 4) 2

05. முயலாரின் அகங்காரம் ஒரு
    1) சினிமாப்பாடல் 2) நாட்டார்பாடல் 3) கதைப்பாடல் 4) அபிநயப்பாடல்

(5x1=5 புள்ளிகள்)

02) **கீறிட்ட இடத்தை நிரப்புக.**

01. புரட்டாதி மாதத்தில் ................................................ விழா கொண்டாடப்படும்.

02. கைகொட்டி ஆடும் கிராமிய நடனம் ..........................................................

03. 3ஆம், 8ஆம் தட்டடவுகள் ........................................................ தாளத்தில் அமைந்துள்ளது.

04. ......................................................... மேளம் அமங்கல வீடுகளில் வாசிக்கப்படும்.

05. திஸ்ரநடையின் சொற்கட்டு ............................................ ஆகும்.

(5x1=5 புள்ளிகள்)

03) **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) அபூர்வ கஸ்தங்களில் ஒன்று | 28 |
| 2) அஸம்யுத கஸ்தங்கள் | நமஸ்காரம் |
| 3) தட்டிக்கும்பிடும் வணக்கம் | சிலிட்டகாங்கூல் |
| 4) ஆய கலைகள் | சங்கராபரணம் |
| 5) பூமகளின் புன்னகை என்ற பாடலின் இராகம் | 64. |

(5x1=5 புள்ளிகள்)

04) **பின்வருவனவற்றிற்கு சரி, பிழை இடுக.**

1. தென்பாங்கில் கடவுள் வாழ்த்து விருத்தத்தில் அமைந்திருக்கும். ( )
2. ஒரு பொருளின் கருத்தைப் புலப்படுத்துவது முத்திரைகள். ( )
3. கையைத் தட்டித் திருப்புதல் லகு ஆகும். ( )
4. ஒரே கஸ்தம் பாவித்து செய்யப்படும் நாட்டவுகளின் எண்ணிக்கை 7 ஆகும். ( )
5. நமஸ்காரத்தில் வரும் சதுரக்கை குறிப்பது பூமாதேவியை. ( )

(5x1=5 புள்ளிகள்)

## பகுதி - II

**எல்லா வினாவிற்கும் விடையளிக்குக.**

01) கிராமிய நடனம் ஒன்றை வகுப்பறை குழுச் செயற்பாட்டுக் கணிப்பீடாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) நீவிர் மேற்கொண்ட வகுப்பறைக் கணிப்பீடு யாது?
2) இக் கணிப்பீட்டுக்குத் தெரிவுசெய்த கிராமிய நடனம் யாது?
3) இக் கிராமிய நடனத்திற்குப் பாவிக்கப்படும் உபகரணங்களைக் குறிப்பிடுக.
4) இக் கிராமிய நடனத்திற்கு எப்படிப்பட்ட ஆடை, ஒப்பனைகள் செய்வீர்?
5) இக்கணிப்பீட்டுக்கு எவ்வகையில் ஆசிரியர் உதவி தேவைப்பட்டது?

(5x2=10 புள்ளிகள்)

02) 3ஆவது நாட்டடவை தாள, அங்கக் குறியீட்டில் எழுதுக.

(10 புள்ளிகள்)

03) பதாக கஸ்த விநியோகத்தை தமிழ்க் கருத்துடன் எழுதுக.

(10 புள்ளிகள்)